**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு,பராபவ ஆண்டு,ஆனி மாதம் 16ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 310/2025**

**CNR No. TNNM14-001062-2025**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு,

நாமக்கல். – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண்.151/2025)

எதிர்

ராதாரவி, த/பெ. செல்லன்,

1/107,நடுவயல், பவர்காடு அஞ்சல்,

எடப்பளி நாடு, கொல்லிமலை வட்டம்,

நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 10.05.2025 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 10.10.2025 |

<table>
<tr><td>3.</td><td>எதிரி கைது செய்யப்பட்டு<br><br>பிணையில் சென்ற நாள்</td><td><table><tr><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr><tr><td>10.05.2025</td><td>10.05.2025</td></tr></table></td></tr>
<tr><td>4.</td><td>எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(a) TNP Act 1937 ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>09.01.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>15.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table><tr><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>சாட்சிகளின் பெயர்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1</td><td>பாஸ்கர்</td><td>15.05.2026</td><td>15.05.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>சிவராஜ்</td><td>12.06.2026</td><td>12.06.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>செல்லதுரை</td><td>12.06.2026</td><td>12.06.2026</td></tr></table></td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள்</td><td>12.06.2026</td></tr>
<tr><td>10.</td><td>BNSS பிரிவு 351(1)(ஆ) ன்</td><td>25.06.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | கீழான கேள்வி | |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 30.06.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச் சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டுநிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(a) TNP Act 1937 ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ்விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழுங்கப்பட்ட நாள் | 30.06.2026 |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

இந்த வழக்கானது 10.10.2025–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு,அரசு தரப்பில் திருமதி. P. கவிதா, அரசு உதவி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு. A. அகிலன், அவர்கள் முன்னிலையாகியும், 25.06.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, இருதரப்பும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப் பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 10.05.2025ம் தேதி 08.30 மணிக்கு செங்கரை காவல் நிலைய சரகம் எடப்புளி நாடு செங்காட்டு பாலம் மணி சில்லிக்கடை அருகே இவ்வழக்கின் எதிரி ராதாரவி என்பவர் அரசு அனுமதியின்றி, அரசு மதுபான கடைகளில் குறைந்த விலையில் உள்ள சுமார் 180 மி.லி அளவு கொண்ட EXPRESS BRANDY – 26 பாட்டில்களை வாங்கி கள்ளத்தனமாக அதிக விலைக்கு விற்க வைத்திருந்ததாக எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act 2024 –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 310/2025 ன் கீழ் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பானையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டது.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(a) TNP Act 1937 –ன் கீழான குற்றச்சாட்டுகளின் சாராம்சம் குறித்து எதிரிக்கு

எடுத்துரைத்து எதிரியிடம் வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.9** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**<u>5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>**

**5.1. அ.சா.1 பாஸ்கர் தனது சாட்சியத்தில்,** கடந்த 10.06.2025ம் தேதி அதிகாலை 6.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த போது நாமக்கல் மதுவிலக்கு காவல் உதவி ஆய்வாளார் அவர்களின் அறிவுரைகளை பெற்று தானும் தலைமை காவலர் 550 திரு.சிவராஜ் என்பவரும் செங்கரை காவல் நிலைய சரகம் பெரக்கரைநாடு எடப்புளிநாடு ஆகிய பகுதியில் மதுவிலக்கு மற்றும் போதை பொருள் குற்றதடுப்பு அலுவலராக கண்காணித்து சென்ற போது தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 10.05.2025ம் தேதி காலை 8.30 எடபுளிநாடு, செங்காட்டுபாலம் மணி என்பவரது சில்லிகடை அருகே சுமார் 35 வயது மதிக்க தக்க ஒருநபர் மறைவாக கையில் ஒரு பிராந்தி பாட்டிலுடன் நின்று கொண்டிருந்தவரை சந்தேகத்தின் பேரில் விசாரித்த போது அவரது பெயர் ராதாரவி த.பெ.செல்லன் 1/107 நடவயல் பவர்காடு அஞ்சல், எடபுளிநாடு, கொல்லி வட்டம் நாமக்கல் மாவட்டம் என்றும், அவர் ஒரு சாக்கு பையில் மறைத்து வைத்திருந்த சுமார் 180 மி.லி. அளவுள்ள Express Brandy–26

பாட்டில் வைத்திருந்ததை பற்றி விசாரிக்க தான் செங்கரை பகுதியில் உள்ள டாஸ்மார்க் கடைக்கு சென்று குறைந்த விலையில் உள்ள மதுபான பாட்டில்களை ஐந்தைந்தாக வாங்கி அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும், அப்போது எதிரியை அவர்வசம் வைத்திருந்த 26 மதுபான பாட்டில்களுடன் சேர்த்து தலைமை காவலர் திரு.சிவராஜ் புகைப்படம் எடுத்ததாகவும், பின்பு மேற்படி நபரையும் அவர் விற்க வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்கள் 26 உடன் காலை 11.00 மணிக்கு நிலையம் அழைந்து வந்து மேல்நடவடிக்கைாக தனியறிக்கையுடன் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை என்பவரிடம் ஆஜர் செய்ததாகவும், மேலும் தனியறிக்கையின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரி ராதாரவி என்பவரை விசாரணை செய்த போது அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காலை 11.20 மணிக்கு கைதுகான காரணம் கூறி கைது செய்தும், பின்னர் தலைமை காவலர் 550 திரு.சிவராஜ் மற்றும் தன் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலோ, ஆசை வார்தையோ, வற்புறுத்தலோ தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 11.30 மணிக்கு பதிவு செய்ததாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் தலைமை காவலர் திரு.சிவராஜ் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், பின்னர் எதிரி ஆஜர் செய்த அரசு மதுபான பாட்டில்கள் ஆன சுமார் 180 மி.லி அளவுக்கொண்ட Express Brandy-26 பாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை காலை 12.15மணிக்கு தலைமை காவலர் திரு.சிவராஜ் மற்றும் தன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் தலைமை

காவலர் திரு.சிவராஜ் ஆகியோரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் பார்வை மகஜர் தயார் செய்தும், அதில் பொது ஜன சாட்சிகள் முன்வராததால் தலைமை காவலர் திரு.சிவராஜ் மற்றும் தன் முன்னிலையில் மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் சாட்சிகளாக தாங்கள் இருவரும் கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது தான் என்றும், இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகைப்படம் அ.சா.ஆ1 ஆகவும், BSA பிரிவு 63(4)(C)ன் கீழான சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகவும், தனி அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலதத்தில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யபட்டது.

**5.2. அ.சா.2 சிவராஜ் தனது சாட்சியத்தில்,** கடந்த 10.05.2025ம் தேதி அதிகாலை 6.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த போது நாமக்கல் மதுவிலக்கு காவல் உதவி ஆய்வாளர் அவர்களின் அறிவுரைகளை பெற்று தானும் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் என்பவரும் செங்கரை காவல் நிலைய சரகம் பெரக்கரைநாடு எடப்புளிநாடு ஆகிய பகுதியில் மதுவிலக்கு மற்றும் போதை பொருள் குற்றதடுப்பு அலுவலாக கண்காணித்து சென்ற போது தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 10.05.2025ம் தேதி காலை 8.30 எடபுளிநாடு, செங்காட்டுபாலம் மணி என்பவரது சில்லிகடை அருகே சுமார் 35 வயது மதிக்க தக்க ஒருநபர் மறைவாக கையில் ஒரு பிராந்தி

பாட்டிலுடன் நின்று கொண்டிருந்தவரை சந்தேகத்தின் பேரில் விசாரித்த போது அவரது பெயர் ராதாரவி த.பெ.செல்லன் 1/107 நடவயல் பவர்காடு அஞ்சல், எடபுளிநாடு, கொல்லி வட்டம் நாமக்கல் மாவட்டம் என்றும் அவர் ஒரு சாக்கு பையில் மறைத்து வைத்திருந்த சுமார் 180 மி.லி. அளவுள்ள Express Brandy–26 பாட்டில் வைத்திருந்ததை பற்றி விசாரிக்க தான் செங்கரை பகுதியில் உள்ள டாஸ்மார்க் கடைக்கு சென்று குறைந்த விலையில் உள்ள மதுபான பாட்டில்களை ஐந்தைந்தாக வாங்கி அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும், அப்போது எதிரியை அவர்வசம் வைத்திருந்த 26 மதுபான பாட்டில்களுடன் சேர்த்து தலைமை காவலர் திரு.பாஸ்கர் புகைப்படம் எடுத்ததாகவும், பின்பு மேற்படி நபரையும் அவர் விற்க வைத்திருந்த அரசு மதுபான பாட்டில்கள் 26 உடன் காலை 11.00 மணிக்கு நிலையம் அழைந்து வந்து மேல்நடவடிக்கைாக தலைமை காவலர் திரு.பாஸ்கர் தனியறிக்கையுடன் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை என்பவரிடம் ஆஜர் செய்ததாகவும், மேற்படி தனியறிக்கையின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரி ராதாரவி என்பவரை விசாரணை செய்த போது அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காலை 11.20 மணிக்கு கைதுகான காரணம் கூறி கைது செய்தும், பின்னர் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் மற்றும் தன் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலோ, ஆசை வார்த்தையோ, வற்புறுத்தலோ தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 11.30 மணிக்கு பதிவு செய்ததாகவும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் தலைமை காவலர் திரு.பாஸ்கர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், பின்னர்

எதிரி ஆஜர் செய்த அரசு மதுபான பாட்டில்கள் ஆன சுமார் 180 மி.லி அளவுக்கொண்ட Express Brandy-26 பாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை காலை 12.15மணிக்கு தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தன் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் தலைமை காவலர் திரு.பாஸ்கர் ஆகியோரும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அன்றைய தினமே 15.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்லதுரை சம்பவ இடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் பார்வை மகஜர் தயார் செய்தும், அதில் பொது ஜன சாட்சிகள் முன்வராததால் தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தன் முன்னிலையில் மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அதில் சாட்சிகளாக தாங்கள் இருவரும் கையொப்பம் செய்ததாகவும், அ.சா.ஆ.6 பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையதாகவும், இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 ன் மூலம் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.3. அ.சா.3 செல்லதுரை தனது சாட்சியத்தில்,** கடந்த 10.05.2025ம் தேதி காலை 11.00 மணிக்கு நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது தலைமை காவலர் திரு.பாஸ்கர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து சம்பவம் தொடர்பாக தனியறிக்கையை தன்னிடம் தாக்கல் செய்ததாகவும், மேற்படி தனியறிக்கையின் பேரில் தான் நிலைய குற்ற எண்.151/2025 சட்டபிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து

அதன் அசலை தனியறிக்கையுடன் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் ஒரு நகலை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை தனது புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் எதிரி ராதாரவி என்பவரை விசாரணை செய்த போது அரசு மதுபான பாட்டில்களை அதிக விலைக்கு விற்க வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காலை 11.20 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்ததாகவும், பின்னர் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவல் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் எதிரி எவ்வித அச்சுறுத்தலும் தூண்டுதலோ, ஆசை வார்த்தையோ, வற்புறுத்தலோ இல்லாமல் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 11.30 மணிக்கு பதிவு செய்ததாகவும், பின்னர் எதிரி ஆஜர் செய்த அரசு மதுபான பாட்டில்கள் ஆன சுமார் 180 மி.லி அளவுக்கொண்ட Express Brandy–26 பாட்டில்களை காலை 12.15மணிக்கு தலைமை காவலர் திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவலர் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், அன்றைய தினமே 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவல் திரு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் பார்வை மகஜர் தயார் செய்தததாகவும், பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை நாமக்கல் உதவி ஆணையர் (கலால்) அவர்களின் வசம் ஒப்படைத்ததாகவும், பின்பு சாட்சிகள் தலைமை காவலர் 671 திரு.பாஸ்கர் மற்றும் தலைமை காவல் திரு.சிவராஜ் ஆகியோரை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இறுதியாக எதிரியின் மீது சட்டபிரிவு 4 (1)(C) TNP Act–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.3 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6) இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1)(ஆ)—ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டடைன வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10.1. இவ்வழக்கில் எதிரி மீது அரசால் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக சட்ட விரோதமாக மதுபானங்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**10.2.** மேற்படி குற்றச்சாட்டை நிரூபிக்க முதலில் எதிரியிடமிருந்து, மேற்படி அளவுக்கு அதிகமான மதுபானங்களை கைப்பற்றியதாக கூறும் பொருண்மையை நிரூபிக்க வேண்டும். அதன் பொருட்டு, இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.1 பாஸ்கர் மற்றும் அ.சா.2 சிவராஜ் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி, கைப்பற்றுதல் நடவடிக்கையானது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.1 பாஸ்கர் மற்றும் அ.சா.2 சிவராஜ் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர். மேற்படி ஒப்புதல் வாக்குமூலமானது காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டதால் அது போலீசாரின் காவலில் இருந்த போது பெறப்பட்டதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பாரதிய சாட்சிய அதிநியம், 2023 பிரிவு 23(2) ன் கீழ் போலீசாரின் காவலில் இருக்கும் போது ஒரு நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிராக நிரூபிக்க இயலாது. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதால் மேற்படி ஒப்புதல் வாக்கு மூலத்தை எதிரிக்கு எதிராக பயன்படுத்த இயலாது.

**10.3.** இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தை அடுத்து தயாரிக்கப் பட்டதாக கூறப்படும் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசரை கவனமாக ஆராயும் போது, கைப்பற்றுதல் மகசரில் "சுமார் 180 மி.லி அளவு கொண்ட EXPRESS BRANDY 26" பாட்டில்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட மதுபானங்களின் அளவு குறித்து தெளிவாக எதுவும் எடுத்துரைக்கப்படவில்லை. மேலும் இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரியிடமிருந்து 180 ML அளவுள்ள 26 பிராந்தி பாட்டில்கள் எதிரியிடம் இருந்ததாக குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள்

எதிரியிடமிருந்து 26 பிராந்தி பாட்டில்கள் கைப்பற்றியதாக சாட்சியமளித்துள்ளார்களே தவிர அவற்றில் மதுபானம் இருந்தது பற்றியோ அல்லது அதன் அளவைப் பற்றியோ குறிப்பிட்டு சாட்சியமளிக்காதது அரசுதரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைகிறது.

10.4. மேலும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 26 மதுபான பாட்டில்களை நாமக்கல்உதவி ஆணையர்(கலால்) அவர்களுக்கு அனுப்பி வைத்ததாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 செல்லதுரை சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் மேற்படி அ.சா.3 செல்லதுரை கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களில் இருந்த திரவம் மதுபானம் தானா என்பதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மேற்படி மதுபாட்டில்களில் இருந்த திரவத்திலிருந்து மாதிரிகள் எடுத்து வேதியியல் ஆய்வுக்கு அனுப்பாதது அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக அமைகிறது. மேலும், கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் மதுவுடன் கூடிய மதுபாட்டில்கள் என அரசுதரப்பில் வாதம் முன்வைக்கப்படவில்லை. மேலும், வாதத்திற்காக மேற்படி மதுபாட்டில் களில் திரவம் இருந்தது என எடுத்துக் கொண்டாலும் அது மதுபானம் தானா என ஊர்ஜிதம் செய்யும் வகையில் வேதியியல் பகுப்பாய்வுக்கு அனுப்பாததால் அரசுதரப்பு வழக்கு முற்றிலும் சந்தேகத்திற்கு உள்ளாகிறது.

10.5. மேலும், இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 செல்லதுரை சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததாகவும், அவர் மூலம் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.9 மாதிரி வரைபடத்தை கவனமாக ஆராயும் போது, சம்பவயிடத்தை சுற்றி செங்கரை பாலம் பஸ் ஸ்டாப், மணி சில்லி கடை, பாலு பெட்டி கடை, பொன்னுசாமி விவசாய நிலம் மற்றும் காளியப்பன் தோட்டம் இருப்பது தெரிய வருகிறது. இந்நிலையில் தனிநபர்

சாட்சிகள் அல்லாமல் காவல் நிலைய சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டதாக அ.சா.ஆ.6 பார்வை மகசரில் குறிப்பிட்டுள்ளது உண்மையில் அ.சா.3 சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்தாரா என்ற சந்தேகம் எழுகிறது. மேலும், இவ்வழக்கில் எதிரி மதுபானங்களை விற்க வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் எதிரியிடமிருந்து மதுபானங்களை விலைக்கு வாங்கிய நபர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்காதது அரசு தரப்பு வழக்கை மேலும் பாதிக்கிறது.

10.6. மேலும் இவ்வழக்கில் எதிரியை பாட்டில்களுடன் அ.சா.2 சிவராஜ் புகைப்படம் எடுத்ததாக அ.சா.1 சாட்சியமளித்து மேற்படி புகைப்படமானது அரசுதரப்பில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி அ.சா.ஆ.1 புகைப்படத்தை கவனமாக ஆராயும் போது, எதிரியிடம் மதுபான பாட்டில்கள் இருப்பது போல் தெரியவில்லை. எனவே, அ.சா.ஆ.1 புகைப்படத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

10.7. இவ்வழக்கில் எதிரியிடமிருந்து மதுபானங்களை கைப்பற்றியது மற்றும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை அரசு தரப்பில் நிரூபிக்காததாலும், புலன் விசாரணையானது முறையாக நடைபெறாததாலும், எதிரி அளவுக்கு அதிகமான மதுபாட்டில்களை சட்ட விரோதமாக தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபித்ததாக அறுதியிட்டு கூற இயலாது.

11) அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிககவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12) முடிவாக,

முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(C) TNP Act r/w 4(1)(a) TNP Act 1937 ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து BNSS பிரிவு 271(1) ன் கீழ் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துகள் குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30-ஆம் நாள் செவ்வாய்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.30 14:49:38 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்-</u>

| **வரிசை எண்** | **சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் பங்கு** |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | பாஸ்கர் | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | சிவராஜ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 3 | அ.சா.3 | செல்லதுரை | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்—</u>**

| **வரிசை எண்** | **ஆவணங்களின் வரிசை** | **ஆவணங்களின் பெயர்** | **ஆவணங்கள் யாரால் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகைப்படம் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | BSA பிரிவு 63(4)(C) ன் கீழான சான்றிதழ் | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | தனி அறிக்கை | அ.சா.1 |
| 4 | அ.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து | அ.சா.1 |
| 5 | அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.1 |
| 6 | அ.சா.ஆ.6 | பார்வை மகஜர் | அ.சா.1 |
| 7 | அ.சா.ஆ.7 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து | அ.சா.2 |
| 8 | அ.சா.ஆ.8 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| 9 | அ.சா.ஆ.9 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |

**<u>அரசுத் தரப்பு சான்று பொருள்—</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் –</u>**

**இல்லை.**

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.30 14:49:45 +0530

**நீதித்துறை நடுவர்,**

**சேந்தமங்கலம்.**

**<u>குறிப்பு–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.

2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.30 14:49:50 +0530

**நீதித்துறை நடுவர்,**

**சேந்தமங்கலம்.**

<u>CASE SUMMARY</u>

**<u>CC-310/2025, Cr.No.151/2025</u>**
(CNR.No. TNNM-14-001062-2025)
<u>PEW NAMAKKAL</u>

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 10.10.2025 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 09.01.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 of the BNSS | NIL |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | Witness examined as / Date of Chief Examination / Date of Cross Examination<br>PW1-Baskar / 15.05.2026 / 15.05.2026<br>PW2-Sivaraj / 12.05.2026 / 12.05.2026<br>PW3-Selladurai / 12.06.2026 / 12.06.2026 |
| vii | Date of examination of the accused under section 351(1)(b) of the Code | 25.06.2026 |

| | | |
|---|---|---|
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.06.30 14:49:56 +0530

Judicial Magistrate,
Sendamangalam.